நிருபணப் பண்ணைகள் போடுவதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 100 விதம் அரசு மானியம் வழங்குகிறது. வேறு கூட்டுறவுத் துறை மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வரை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் தமிழக அரசின் சார்பில் நடைபெறுகிறது. மத்திய அரசின் உதவியோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத்திரம் இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் நிறைவேற்றப்பட்டுவருகிறது. மற்ற மாவட்டங்களுக்கு அதை விரிவுபடுத்துவதற்கு இப்பொழுது ஒன்றும் குறிப்பு இல்லை.

திரு. நா. வீராசாமி: இவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டு வாழை உற்பத்தி செய்யவேண்டும் என்று நம்முடைய அரசு நினைக்கும்பொழுது, திடீரென்று வாழைக்கு நோய் வருகிறது. அந்த நோய்களைத் தடுப்பதற்கு டைட்டீன், இலட் 48, இலட் 42 போன்ற மருந்துகள் தெளிக்கப்பட்டாலும், அது சரியான பலன் அளிக்கவில்லை. அந்த நோய்களைத் தடுப்பதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பயிர்களுக்கு மாத்திரம் அல்ல, உயிர்களுக்கும் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுபோல, இவைகளைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: Is it not a fact that in Chingleput district, this variety is not coming up very well. That is the information I have got. Will the Hon. Minister tell me whether it is true or not?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி எந்தவிதமான புகாரும் வரவில்லை. சென்ற ஆண்டு 1,000 ஹெக்டாரில் அப்படி உற்பத்தி செய்யப்பட்டது. அது சரியாக வருகிறது என்ற காரணத்தினால் இந்த ஆண்டு இன்னும் 1,000 ஹெக்டார், அதாவது 2,500 ஏக்கர் சேர்த்து, 2,000 ஹெக்டாரில் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல எந்தவிதமான குறைகளும் இதுவரையில் எங்களுக்கு வரவில்லை.

திரு. கே. கந்தசாமி: இந்தப் பச்சை வாழை மதுரை மாவட்டத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்றாலும், அந்த வளர்ச்சித் திட்டம் அங்கே செயல்படுத்தப்படவில்லை. இதை வெளி நாட்டிற்கு அனுப்பி நல்ல விலைக்கு விற்பதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது? இல்லையெனில் இனிமேலாவது அதற்கான முயற்சி எடுக்கப்படுமா?